**Deposition of Witness**
**(Chapter XXIII Code of Criminal Procedure )**
**In the Court of Judicial Magistrate, No.III, Cuddalore.**

| | |
|---|---|
| Case Number | : C.C.No.24 /2015 |
| Police Station | : Thiruppapuliyur P.S. |
| Deposition of witness for Prosecution | : L.W.15 / P.W.13 |
| Name | : சந்திரவேல் - சிறப்பு உதவி ஆய்வாளர் |
| Father Name/Husband Name | : |
| Village | : |
| Cuddalore | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 விதிமுறைகளின் படி 13.02.2025 நாளாகிய இன்று திருமதி.L.Vanaja, B.A., B.L., நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.3, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதன்மை விசாரணை</u>

**01.** நான் நெல்லிக்குப்பம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்து தற்போது ஓய்வு பெற்றேன். கடந்த 14.08.2013 அன்று இரவு 22.30 மணியளவில் நான் திருப்பாப்புலியூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது தணிகைவேலன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று நிலைய குற்ற எண்.376/2013 இ.த.ச.பிரிவுகள் 279, 304(A) ஆகிய பிரிவுகளின் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். நான் இத்துடன் முதல் விசாரணையை முடித்து மேல் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு வைத்தேன். என்னை ஆய்வாளர் விசாரணை செய்தார்.

**( முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

**02.** முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து 2 நாட்கள் கழித்து தான் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது என்றால் எப்போதும் கொடுப்பது போல் நீதிமன்ற காவலரிடம் கொடுக்கப்பட்டுவிட்டது. தணிகைவேல் என்பவருக்கு அடிப்பட்டதாக புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வழக்கிற்கு ஏற்றாற்போல் புகார் பின்னிட்டு தயார் செய்யப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததால் தான் நீதிமன்றத்திற்கு முதல் தகவல் அறிக்கை காலதாமதமாக அனுப்பப்பட்டது என்றால் சரியல்ல. விபத்து நடந்த இடத்தில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டதாக காவல் நிலையத்திற்கு ஏதேனும் தகவல் வந்ததா என்றால் இல்லை. 4 மணிநேரத்தில் புகார் வந்தது. சம்பவம் நடந்த உடனடியாக

சம்பவ இடத்திற்கு போலிசார் சென்று தகவல் பெற்றுள்ளார்கள். அந்த விவரம் வழக்கிற்கு பாதகமாக இருந்ததால் அதை மறைத்துவிட்டு இந்த புகாரை தயார் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

Taken down by me in the presence of Accused, and read over to the witness and admitted by her/him to be correct.

(S/d. L.Vanaja, B.A.,B.L.,)
Judicial Magistrate No.III
Cuddalore.